DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | S.T.C No. 205/2025 |
| Deposition of witness | : | PW- 2 |
| Name | : | பிரியா |
| Father's /Husband Name | : | செந்தில்குமார் |
| Village | : | சுக்கிரவாரகட்டளை |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 45 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day March 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

கடந்த 27.9.2024 ம் தேதி 10.30 மணி அளவில் ஆஜர் எதிரி எங்கள் வீட்டிற்கு வந்து எங்கள் வீட்டில் இருந்த சோலார் பேனல் ஒயர்களை அளக்கு அறுவாளால் அறுத்து விட்டார். அதை மீண்டும் சரி செய்ய எங்களுக்கு 26,500 ரூபாய் செவவு ஆனது. பிறகு சம்பவம் தொடர்பாக எனது கணவர் புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 4 முறை வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். எனது மாமனார் உயிருடன் இருந்தபோதே எதிரிக்கு சொத்து எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் எதிரி மீது ஒரு சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த சிவில் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரில் இருந்தார் என்றால் சரியல்ல சம்பவ இடத்தில் தான் இருந்தார். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல சம்பவ இடத்தில்

தான் இருந்தேன் எதிரி ஒயர் அறுத்ததை நான் பார்த்தேன். ஒயருக்கு உண்டான ரசீதுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் போலிசாரிடம் கொடுத்தோம். நாங்கள் பொய் புகார் அளித்தோம் என்றாலும் அ.சா.1 எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறோம் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Muncif -CumJudicial Magistrate,
Nannilam.